<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

எ.ம.சா.1 தேதி. 24.07.2025

| MCOP. No. | 165/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜார்ஜ் பெர்ணான்டஸ் | த/பெ, | அந்தோணிசாமி |
| வயது | 34 | தொழில் | உதவியாளர், வட்டாரப்போக்குவரத்து அலுவலகம், மயிலாடுதுறை |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். சம்மன் பேரில் ஆஜராகி உள்ளேன் என்றால் சரிதான். வட்டார போக்குவரத்து அலுவலரிடம் Authorisation Letter வழங்கினார் என்றால் சரிதான். அந்த Authorisation Letter **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எந்த கிரைம் நம்பருக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 575/2021 வண்டி பதிவுஎண் TN 10 R 3399 என்ற Maruti Swift Car எங்கு ஆய்வு செய்யப்பட்டது என்றால் சீர்காழி, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 19.08.2021 அன்று செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வாகனத்தை ஒட்டிய நபர் அருண்குமார் என்பவருக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டநர் உரிமம் இல்லை. வாகன எண் TN 10 R 3399 மோட்டார் வாகன அறிக்கை **ம.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. Parivahan என்ற இணைய தளத்தில் உள்ள மேற்படி ஓட்டுநரின் ஓட்டநர் உரிமத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு மட்டுமே குறிப்பு உள்ளது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்களிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தயார் செய்யப்படும் என்றால் சரிதான். எங்களிடம் ஆய்வுக்கு காண்பிக்கப்பட்ட வாகனம் நான்கு சக்கர வாகனம் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் மேற்படி ஓட்டநருக்கு CR படிவம்

அல்லது தண்டமோ விதிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.